Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

The Optative verb "Peruga" in the Ettuthokai love anthologies: Methods of interpretation by Commentators

Arun Selvakumar S[1*], Dr. N. Janakiraman[2],

[1]Research Scholar, Reg. No. BDU2510632781443,
Department of Tamil Studies, Bharathidhasan University,
Tiruchirappalli – 620 024.
ORCiD: https://orcid.org/0009-0005-8576-8098,
[2]Research Advisor, Associate Professor of Tamil, Centre for Distance and Online Education,
Bharathidhasan University, Tiruchirappalli – 620 024.
Email: janakiraman.n@bdu.ac.in Contact No: 9842523869
ORCiD: https://orcid.org/0000-0001-7462-3858).
Corresponding Author Email: askarun334@gmail.com Tel: 8531846049

Article Info
Received on 27-April-2026, Revised on 29- April-2026, Accepted on 29- April-2026, Published on 10-May-2026

ABSTRACT

The internal (akam) and external (puṟam) lives of ancient Tamil Scholars are intricately documented in the Sangam literary works, Eṭṭuthokai (The Eight Anthologies) and Pattuppāṭṭu (The Ten Songs). Among these, the interior-themed texts of Ettuthokai effectively convey the diverse emotional states of love and the perspectives of a variety of characters within established linguistic frameworks. Optative verbs (viyaṅkōḷ vinaimuttṟu) are frequently employed in Sangam literature to communicate the characters' four primary internal emotions and expressions: blessing (vāḻttal), scolding (vaital), requesting (vēṇḍutal), and commanding (vitittal). This research paper focuses on the specific optative verb "peruga" (may you receive/attain) as it is used in the core Ettuthokai love anthologies: Natrinai (natṟṟiṇai), Kurunthokai (kuṟuntokai), Aingurunooru (Aiṅkuṟunūṟu) and Akananooru (akanāṉūṟu). This study endeavors to examine the semantic shifts and unique contextual meanings of this word in relation to the changing landscapes (tiṇai) and the utterances of the characters, from both grammatical and literary perspectives.

KEYWORDS: *Sangam Literature, Eṭṭuthokai, Optative verb, Peṟuka, Blessing, Requesting, Narrative Frameworks.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

எட்டுத்தொகை அக நூல்களில் "பெறுக" வியங்கோள் வினைமுற்று: உரையாசிரியர்கள் வழி பொருள்தரும் முறைகள்

[1]**சே. அருண் செல்வகுமார்**, ஆய்வாளர், பதிவு எண்: BDU2510632781443, முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு-நேரம்), தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.
மின்னஞ்சல்- askarun334@gamil.com, அலைபேசி எண் – 8531846049,

[2]**முனைவர் நா. ஜானகிராமன்,** ஆய்வு நெறியாளர், தமிழ் இணைப்பேராசிரியர், தொலைதூரம் மற்றும் இணையவழிக் கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.
மின்னஞ்சல் janakiraman.n@bdu.ac.in,

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பழந்தமிழர்களின் அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்வியலை மிகவும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை அக நூல்கள் காதலின் பல்வேறு உணர்வு நிலைகளையும், மாந்தர்களின் கூற்றுகளையும் மொழியியல் நெறிகளோடு எடுத்தியம்புகின்றன. சங்க கால மாந்தர்களின் அக உணர்வுகளான வாழ்த்தல், வைதல், வேண்டுதல், விதித்தல் ஆகிய நான்கு பொருட்களை வியங்கோள் வினைமுற்றுச்சொற்கள் வெளிப்படுத்துகின்றன. எட்டுத்தொகை அக நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகியவற்றில் பயின்றுவந்துள்ள “பெறுக” என்னும் வியங்கோள் வினைமுற்றுச்சொற்கள் முக்கியமாக இடம்பெறுகின்றன. இச்சொல்லானது, வெவ்வேறு திணைச் சூழல்களில் வெவ்வேறு மாந்தர்களின் கூற்றுகளில் பொருண்மை மாற்றம் பெற்று ஆளப்பட்டுள்ள முறைமையினை என்பதை இலக்கிய மற்றும் இலக்கண நோக்கில் உரையாசிரியர்களின் வழியில் இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்

சங்க இலக்கியம் - எட்டுத்தொகை - பெறுக – வாழ்த்தல் - வேண்டுதல் - வியங்கோள் வினைமுற்று - கூற்று நெறி.

முன்னுரை

தமிழ் மொழியானது இலக்கண இலக்கிய வளம் உடையது. தமிழ்மொழியில் வினைச்சொற்கள் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளன. மாந்தர்களின் உணர்வுகளைச் சுருக்கமான எளிய வடிவில், ஆழமான பொருளுடன் வெளிப்படுத்துவதற்குப் புலவர்கள் பல்வேறு வினைச்சொற்களைக் கையாண்டுள்ளனர். தொல்காப்பியர் குறிப்பிடும் வினைமுற்றுச் சொற்களில் வியங்கோள் வினைமுற்றுச்சொல் தனிச்சிறப்புடையது. அது ஏவல் அல்லது கட்டளையாக இருந்து பொருள் தருவதோடு, வாழ்த்தல், வைதல், விதித்தல் மற்றும் வேண்டுதல் ஆகிய நான்கு பொருள்களையும்

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026

வெளிப்படுத்துகிறது. எட்டுத்தொகையில் அகம் சார்ந்த நூல்களான நற்றிணை (பாடல் எண்: 8), குறுந்தொகை (பாடல் எண்கள்: 14, 389), ஐங்குறுநூறு (பாடல் எண்: 447) மற்றும் அகநானூறு (பாடல் எண்: 345) ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள "பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது, ஒன்றைப் பெறுதல் என்ற பொருளை மட்டும் உணர்த்தாமல் அக மாந்தர்களின் அற உணர்வு, நன்றியறிதல், தலைவன் தலைவியின் காதல் ஆழம் மற்றும் இயற்கையைப் போற்றும் பண்பாடு ஆகியவற்றின் குறியீடாகத் திகழ்கிறது. உரையாசிரியர்களின் வழியில் "பெறுக" எனும் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லின் இலக்கணப் பின்னணியையும், இலக்கிய நயத்தையும் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

வியங்கோள் வினைமுற்று

வியம் என்ற சொல்லுக்கு ஏவல் என்று பொருள்[1]. ஏவுதலைக் கொண்ட வினைமுற்றுச்சொல் வியங்கோள் வினைமுற்று என்றழைக்கப்பட்டது. வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது சங்க காலத்தில் இருந்தே செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் இருந்து வருகிறது. வியங்கோள் வினைமுற்று பெரும்பாலும் நான்கு பொருள்களில் பயன்படுத்தப்பெறுகிறது. அவை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகியவை ஆகும். இச்சொல்லானது, இருதிணைக்கும், ஆண்பால், பெண்பால், பலர்பால் உள்ளிட்ட ஐம்பால்களுக்கும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் உரியதாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லுக்கு ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.

சங்க இலக்கியத்தில் வாழ்க, வெல்க உள்ளிட்ட வியங்கோள் சொற்கள் வாழ்த்தல் பொருளிலும், ஒழிக, வீழ்க, தாழ்க உள்ளிட்ட வியங்கோள் சொற்கள் வைதல் பொருளிலும், உண்க, கொணர்க, வருக உள்ளிட்ட வியங்கோள் சொற்கள் விதித்தல் பொருளிலும், பெறுக, தருக உள்ளிட்ட வியங்கோள் சொற்கள் வேண்டல் பொருளிலும் கையாளப்பட்டுள்ளன. வியங்கோளில் க, ய ஆகிய இரு உயிர்மெய் எழுத்துகளும், ரகர ஒற்றை இறுதியில் கொண்ட இய, இயர் என்பன போன்ற விகுதிகளும் பெரும்பான்மையாக வரும். வாழ்க, வாழிய, வாழியர் என்பன அதற்குச் சான்றுகள் ஆகும். வியங்கோள் சொல்லானது உடன்பாட்டுப் பொருளில் வருவதைப் போன்று எதிர்மறைப் பொருளிலும் வரும்.

'பெறுக' - சொல்லிலக்கணமும் தொல்காப்பிய நெறியும்

"கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பா லெங்கு மென்ப" (நன்னூல். 338)

[1] *தமிழ்-தமிழ் அகரமுதலி.பக்.*978

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026

என்று வியங்கோள் வினைமுற்றுச்சொற்கள் குறித்து நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் எடுத்துரைக்கிறார். க, ய என்ற இரண்டு உயிர் மெய்களையும், ரகர மெய்யையும், இறுதியாக கொண்ட மொழிகள் வியங்கோள் வினைமுற்றுச்சொற்கள் ஆகும். இந்த வினைமுற்றுச்சொற்கள் பெரும்பாலும் ஈற்றில் ‘க’ என்றும், சிறுபான்மை இய, இயர் என்னும் பொருளில் வரும். முனைவர் சுந்தர சண்முகனார் தன்னுடைய நூலில், “நன்னூல் ஆசிரியர் வியங்கோள் வினைமுற்று தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய எல்லா இடங்களிலும் வரும் என்று கூறியிருப்பினும் அவருக்கு ஏறக்குறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர் தன்மை, முன்னிலை ஆகிய இரண்டிற்கும் வியங்கோள் வினைமுற்று வராது; படர்க்கைக்கு மட்டுமே வரும்” என்று கூறியுள்ளார்.[2]

“அவற்றுள்

முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடும்

மன்னா தாகும் வியங்கோள் கிளவி”- (தொல்காப்பியம்:226).

இந்நூற்பாவிற்குச் சேனாவரையார் தம் உரையில், "வியங்கோள் கிளவியானது முன்னனிலையும் தன்மையுமாகிய இரண்டிடத்தோடும் நிலைப்பெறாதாம்" என்பார்[3] . வியங்கோள் சொல்லானது படர்க்கைக்கு மட்டுமே வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அவர் காலத்திற்குப் பின்னர் இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து, பவணந்தியார் தன்னுடைய நன்னூலில், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய எல்லா இடத்திற்கும் பொதுவாய் வியங்கோள் வரும் என்று கூறியுள்ளதன் வாயிலாக வியங்கோள் வினைமுற்றுச்சொற்கள் காலத்திற்கேற்ப வளர்ச்சியடைந்திருப்பதை அறியமுடிகிறது.

‘பெறு’ என்னும் உடன்பாட்டு வினையடியானது, ‘க’ என்னும் வியங்கோள் விகுதி பெற்று ‘பெறுக’ என்ற சொல்லாக வடிவம் பெற்றது. சங்க இலக்கியத்தில் இச்சொல்லானது, பெரும்பான்மையாக “வாழ்த்துதல்” மற்றும் “வேண்டல்” ஆகிய இரு பொருண்மைகளிலேயே தன்மையிலும், படர்க்கையிலும் மிளிர்ந்து நிற்கிறது.

தாயின் பேற்றுக்குத் 'தொண்டி' நகர் கிடைக்க வாழ்த்துதல்

நற்றிணையின் எட்டாவது பாடலில் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவியைக் கண்ட தலைவன், அவளது அழகைப் பாராட்டி அவளை ஈன்றெடுத்த தாயை வாழ்த்திப் பேசுகிறான். "இயற்கைப்புணர்ச்சி என்பது ஒத்தார் இருவர் தாமே கூடுங் கூட்டம்" என்பார் க.வெள்ளைவாரணர்.[4]

"திண்டேர்ப் பொறையன் றொண்டி-

தன்திறம் பெறுகவிவ ளீன்ற தாயே!" (நற். 8: 9-10)

---

[2] *தொல். திரா. மொழி. பக்.* 184

[3] *தொல். சொல். சேனா.உரை. பக்.*122

[4] *தொல்.களவியல்.உரை.வளம்.பக்.*3

இப்பாடலில் சேர மன்னனின் வளம் மிகுந்த 'தொண்டி' நகரின் சிறப்பினை தலைவியைப் பெற்ற தாய் பெற வேண்டும் எனத் தலைவன் வாழ்த்துகிறான். "பெறுக" என்னும் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது இங்கு உயரிய “வாழ்த்தல்” பொருண்மையில், ஓர் ஊரின் ஒட்டுமொத்தச் சிறப்பையும், பெருமையையும் தலைவியை ஈன்ற தாய் பெற்று சிறக்க வேண்டும் நோக்கில் கையாளப்பட்டுள்ளது.

நச்சினார்க்கினியர் தன்னுடைய தொல்காப்பிய பொருளதிகார உரையில் (தொல்.பொ.அக.14) இப்பாடலை மேற்கோள்காட்டி, இதனைப் புணர்தலும் புணர்தல் நிமித்தம் என்று கூறுகிறார்.[5] புணர்தல் என்ற சொல்லுக்குப் பொருந்துதல், கலவி செய்தல், அளவாளவுதல் மற்றும் தலைவனும் தலைவியும் கூடுதலாகிய குறிஞ்சி உரிப்பொருள் என்று மு.சண்முகம் பிள்ளை அவர்கள் தொகுத்த தமிழ்-தமிழ் அகரமுதலி பொருள் தருகின்றது.[6] தலைவன், தன் ஆயத்தோடு (தோழியர் கூட்டம்) ஆடி மகிழும் தலைவியைக் கண்டு அக மகிழ்ந்து, அவள் மீது கொண்ட மோகம் காரணமாக அவளின் தந்தை மற்றும் தாயையும் வியந்து பாராட்டுகிறான்.

பின்னத்தூர் அ. நாராயணசாமி அவர்கள் தன்னுடைய *நற்றிணை* உரையில் இப்பாடல் இயற்கை புணர்ச்சி இறுதியில் தலைவன் கூறியதாகும் என்றும், பொறையனது தொண்டி நகரமானது எல்லா வளமும் பெற்றுத் திகழ்வது போல தலைவியை ஈன்ற தாய் எல்லா வளமும் பெற்று சிறக்க வேண்டும் என்று தலைவன் கூறியுள்ளான் என்கிறார்.[7]

உ.வே.சா தன்னுடைய விளக்க உரையில், "தலைவன் தலைவியின்பால் பெரும் பயன் பெற்றானாகையால் பெற்றோரை வாழ்த்தினான். எனவே இது இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில் எழுந்த கூற்றாம். தொண்டி எல்லா வளனும் பெற்றுச் சிறந்துளதுபோல் தாய் எல்லா நன்மைகளும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்று கூறினான்" என்பார்.[8]

இப்பாடலின் ஆசிரியர் குறித்த செய்திகள் பின்னத்தூர் அ. நாராயணசாமி, உ.வே.சாமிநாதர் ஆகியோரின் உரைகளில் குறிப்பிடப்படவில்லை. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தன்னுடைய *நற்றிணை உரையில்*, இப்பாடலை பாடிய புலவர் கண்ணகனார் என்பவராக இருக்கலாம் என்றும், அவர் சேரநாட்டைச் சேர்ந்தவர் என்றும் கூறுகிறார்.[9] அதன் காரணமாகவே அவர் சேரமன்னனின் தொண்டி வளத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். இப்பாடலைப் பாடிய புலவர் சேரமன்னனின் செல்வச்செழிப்பு மிக்க தொண்டி நகரைப் போற்றிப்பாடும் விதமாக தலைவன் தலைவியின் தாய் தொண்டிநகர்ச் சிறப்பைப் பெறட்டும் என கூறுவதாக இயற்றியுள்ளார்.

---

5 *தொல்.பொருள்.நச்.உரை.பக்.*199
6 *தமிழ்-தமிழ் அகரமுதலி. பக்.*780
7 *நற்.நாரா. உரை பக்.*13
8 *நற்.உ.வே.சா.உரை.பக்*18
9 *நற்.ஔவை.உரை.பக்.*69

தலைவியின் மீது தலைவன் கொண்ட அளவற்ற அன்பின் வெளிப்பாடு காரணமாகத் தலைவின் தலையின் தாய் தொண்டி நகர் வளமாக இருப்பதைப் போல தலைவியின் தாயின் வளமாக வாழட்டும் என்று வாழ்த்துகிறான். இவ்விடத்தில் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது வாழ்த்தல் பொருளில் வந்துள்ளது.

காதலின் துணிவும் மடலேறுதலும்

மடலேறுதல் என்பது காதல் கைகூடாததால் காம மிகுதியின் காரணமாக பனங்கருக்கினை எடுத்துக் குதிரைபோல் செய்து, அதில் ஏறி அமர்ந்து உணவு உண்ணாமலும் தண்ணீர் குடிக்காமலும் தான் காதலித்த பெண்ணை அடைவதற்கு ஆடவர் மேற்கொள்ளும் முயற்சி ஆகும். அது புகழ் தரத்தக்க செயல் இல்லை என்பதால் பெண்கள் மடலேறுவது இல்லை. இதனையே தொல்காப்பியர்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான." (தொல்காப்பியம்: 981)

என்ற நூற்பாவின் வாயிலாக அகத்திணையியலில் குறிப்பிடுகிறார். "மடலேறுதல் என்பதும் மகளிர்க்கு இல்லை. ஆடவனே மடலேறுவேன் என்று அச்சுறுத்தவும் மடலேறவும் முயல்வான். மகளிர்க்கு அது சிறப்புடையதன்று என்பதால், எத்திணையிலும் அது பெருந்திணையேயாயினும் ஒரு பெண் மடலேறுதல் என்பதில்லை" என்று மடலேறுதல் குறித்து தமிழண்ணல் விளக்கம் தந்துள்ளார்.[10]

தலைவன் தோழியிடம் தன்னை தலைவி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் தான் மடலேறப்போவதாகக் கூறும் இடமும் உண்டு. இதையே, "மடன்மா கூறு மிடனுமா ருண்டே"[11] என்பார் தொல்காப்பியர். குறுந்தொகையின் பதினான்காவது பாடலில் தொல்கபிலர், தலைவன் தன் காதல் மறுக்கப்படும் சூழலில், தோழியிடம் தலைவி மீதான தன் வேட்கையை ஊரார் அறிந்து கொள்வதற்கு மடல் ஏறத் துணியும் இடத்தில் ‘பெறுகதில் அம்ம’ எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் அம்ம யானே பெற்றாங்" (குறுந். 14: 2-3)

இவ்விடத்தில் தலைவியைத் தான் மடலேறுவதால் அடைந்தே தீருவேன் என்ற தலைவனின் அகம் சார்ந்த துணிவை உணர்த்தும் கருவியாகப் "பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச்சொல் உருவெடுத்துள்ளது. இங்கு "தில்" என்னும் இடைச்சொல்லானது காலம் பற்றி வந்துள்ளது.[12]

மடலேறுதலைப் பற்றி உ.வே.சா தன்னுடைய *குறுந்தொகை* உரையில் தலைவன் தன்னுடைய உருவத்தையும், தலையின் உருவத்தையும் வரைந்த படத்தைக் கையிலேந்தி மடலேறி தெருவில்

---

10 தொல்.பொருள்.தொ.1. பக்.35
11 தொல்.களவு.11
12 குறுந்.உ.வே.சா.உரை.பக்.39

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026

செல்வதன் வாயிலாக அவள் கணவன் இவன் என்று ஊரினர் அறிதற்கு ஏதுவானது என்கிறார்.[13] பெருமழைப் புலவரான பொ. வே. சோமசுந்தரனார் தன்னுடைய *குறுந்தொகை* உரையில் இப்பாடலில் தலைவன் தோழியிடம், நீ குறை மறுத்தாலும் நான் மடலேறி அவளைப் பெறுவது உறுதி என்ற நோக்கோடு "பெறுக யானே" என்று கூறியுள்ளான் என்கிறார்.[14]தலைவியை அடைய தோழியின் உதவி கிடைக்காத தலைவன் தலைவியைத் தான் மடலேறித் தான் அடைய முடியும் என்ற சூழல் வந்தால் கூட அதையும் நான் செய்து அவளைப் பெறுவேன் என்று தன்னுடைய உணர்ச்சிமிகுதியை வெளிப்படுத்துகிறான். இங்கு வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது விதித்தல் பொருளில் பயின்று வந்துள்ளது.

நன்றியறிதலின் குறியீடு

தலைவன் தலைவியைத் திருமணம் செய்வதற்கு முயல்கிறான் என்ற நல்ல செய்தியைக் கொண்டு வந்த தலைவனின் ஏவலனை (குற்றேவல் செய்பவன்) தோழி மனமார வாழ்த்தும் பொழுது ‘பெறுக’ எனும் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லை வேட்டகண்ணனார் பின்வரும் தன்னுடைய குறுந்தொகை பாடலில் கையாண்டுள்ளார்.

"நெய்கனி குறும்பூழ் காய மாக
ஆர்பதம் பெறுக தோழி அத்தை" (குறுந். 389: 1-2)

இப்பாடலில் தலைவன் தலைவியை விரைவில் திருமணம் செய்யப்போகிறான் என்ற நல்ல செய்தியைக் கொண்டு வந்து நன்மை செய்தவர்க்கு நல்ல உணவு கிடைக்க வேண்டும் என தோழி வாழ்த்துகிறாள். இவ்விடத்தில் வரும் வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது வாழ்த்துதல் பொருளில் வந்து பழந்தமிழரின் நன்றியறிதல் மற்றும் விருந்தோம்பல் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

கடமை முடித்தலின் வேட்கை

தலைவன் கல்வி கற்பதற்காகவும், பொருளீட்டுவதற்காகவும், மன்னனுக்காகத் தூது செல்வதற்காகவும் செல்லும்பொழுது தலைவியை விட்டு பிரியும் சூழல் ஏற்படும். சங்க காலத்தில் பெண்கள் போர்ப்பாசறையில் தம் கணவனுடன் தங்கக் கூடாதென்றும் ஒரு மரபு இருந்து வந்ததாக தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள்காட்டுவார் டாக்டர் கே.கே. பிள்ளை. [15] அந்நூற்பா பின்வருமாறு,

“எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்” (தொல்.பொருள்.கற்பியல், 34)

---

13 *மேலது. பக்.39*

14 *குறுந்.பொ.வே.சோ.உரை.பக்.23*

15 *தமிழக வரலாறும் பண்பாடும், பக்.138*

தலைவியைப் பிரிந்து போர்ப் பாசறையில் இருக்கும் தலைவன், தான் திரும்பி வருவதாகக் கூறிச்சென்ற கார்ப்பருவத்தில் பூக்கும் மலர்களைக் கண்டு வருந்துகிறான். அவன் தலைவி இந்த கார்ப்பருவத்தைக் கண்டு ஆற்றாது வருந்தாமல் இருப்பதற்கு, தன்னுடைய மன்னனின் போரை முடித்து தான் விரைந்து தலைவியைக் காண வேண்டும் என ஏங்குகிறான். இச்செய்தியை ஐங்குறுநூற்றில் முல்லை பாடிய பேயனார் பாசறைப் பத்தில் தெரிவிக்கிறார்.

"பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே" (ஐங்குறு. 447: 1)

இங்கு போர்ப்பாசறையில் இருக்கும் தலைவன் தன்னுடைய தலைவியை நினைத்து வருந்தி, மன்னனின் போர்த்தொழில் விரைந்து முடிவு பெறட்டும் என்று வேண்டுகிறான். இந்த வேண்டுதலில், தன் கடமையை முடித்துவிட்டு இல்லறத்திற்குத் திரும்பத் துடிக்கும் தலைவனின் அற உணர்வு வெளிப்படுகிறது. இவ்விடத்தில் "பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச்சொல்லானது வருத்தப்பொருளில் கையாளப்பட்டுள்ளது.

இயற்கையைப் போற்றும் அகநெறி

அகநானூற்றில் குடவாயிற் கீரத்தனார் தன்னுடைய பாடலில் தலைவன் பாலைநிலத்தின் வழியே பொருள்தேடச் செல்கின்றான். அவன் செல்லும் பாலைநிலப் பாதை அழகு பெற வேண்டும் எனத் தோழியிடம் தலைவி கூறுவதாக குறிப்பிடுகிறார். தலைவனும் தலைவியும் செல்லும் பாலைநிலப் பாதை அழகு பெற வேண்டும் எனத் தோழி வாழ்த்துகிறாள்.

"செம் மணற் சிறு நெறி கம்மென வரிப்ப,
காடு கவின் பெறுக தோழி!" (அகம். 345: 17-18)

இப்பாடலில் தலைவியைப் பிரிந்து பொருள்வயிற் பிரிவை மேற்கொண்ட தலைவன் செல்லும் பாலை நில வழியில் பூக்கள் உதிர்ந்து செம்மண் பாதையை அழகு செய்ய, காடு பொலிவு பெற வேண்டும் என்ற இந்த வாழ்த்தில், மனிதர்களின் அக வாழ்விற்கு இயற்கை துணையாக நிற்க வேண்டும் என்ற சங்ககால மேன்மைமிக்க சிந்தனையானது "பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச் சொல்லின் வழி நிலைநாட்டப்படுகிறது. இவ்விடத்தில் வியங்கோள் சொல்லானது வாழ்த்துதல் பொருளில் கையாளப்பட்டாலும், வருத்தப்பொருளை வெளிப்படுத்துகிறது.

கூற்று முறைகளும் பொருண்மை மாற்றமும்

ஆய்வுச் சான்றுகளின்படி, "பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது, ஒரே இலக்கண வடிவத்தைக் கொண்டிருந்தாலும், கூற்று நிகழ்த்தும் மாந்தர்களுக்கு ஏற்ப அதன் பொருண்மை மாறுகிறது. நற்றிணை 8வது பாடலில் தலைவியின் தாயைச் சிறப்பிக்கவும், குறுந்தொகை 14வது பாடலில் தலைவியை அடைவதற்காக மடலேறத் துணியும் தலைவனின் வேட்கையாகவும், குறுந்தொகை 389வது பாடலில் தோழியின் கூற்றில் ஏவலனை வாழ்த்தும்

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026

நன்றியுணர்வைக் குறிக்கும் சொல்லாகவும் இச்சொல் விளங்குகிறது. தலைவன் தன் மன்னன் பொருட்டு மேற்கொண்ட பகைவயிற் பிரிவு முடிந்து தலைவியைச் சேர முயற்சிக்கும் தவிப்பாகவும் என 447வது பாடலில் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. அகநானூற்றில் பாலைத்திணை சார்ந்த 345வது பாடலில் தன்னைப்பிரிந்து பாலைநில வழியில் செல்லும் தலைவனைப் பற்றி தலைவி தோழியிடம் அவர் செல்லும் காடு அழகுபெறட்டும் என வாழ்த்துப் பொருளில் இச்சொல் தலைவியின் கூற்றில் கையாளப்படுள்ளது.

முடிவுரை

"பெறுக" என்ற வியங்கோள் வினைமுற்றுச் சொல்லானது சங்க இலக்கிய எட்டுத்தொகை அக நூல்களில் மிக உயரிய இலக்கிய நயத்தைத் தோற்றுவிக்கிறது. இச்சொல் வெறும் ஏவலாக மட்டும் வராமல், பெரும்பான்மையாக மாந்தர்களின் நல்வாழ்த்தாகவும், வேண்டுதலாகவும் அகநூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. விருந்தோம்பல், நன்றியறிதல், இயற்கையோடு இயைந்த காதல் வாழ்வு போன்ற சங்க காலச் சமூக விழுமியங்களைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் ஒரு பண்பாட்டுக் குறியீடாக இச்சொல் இடம்பெற்றுள்ளது.

பார்வை நூல்கள்

[1.] இளங்குமரனார் புலவர் இரா., 2003, தொல்காப்பியம் (சொல்லதிகாரம்): சேனாவரையம், சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

[2.] இளங்குமரணார் புலவர் இரா., 2003, தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம் (முதல் தொகுதி), சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

[3.] கலியாணசுந்தர் எஸ், (ப.ஆ), 1947, எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகை, சென்னை:கபீர் அச்சுக்கூடம்.

[4.] சண்முகம் பிள்ளை மு., (தொ.ஆ), 1985, தமிழ்-தமிழ் அகரமுதலி, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[5.] சுந்தரசண்முகனார், 1988, தொல் திராவிட மொழி - கண்டுபிடிப்பு, புதுச்சேரி: புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்.

[6.] சுந்தரமூர்த்தி கு., (ப.ஆ), 1966, தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை, புதுக்கோட்டை: மதுரை ரிப்பன் பிரஸ்.

[7.] சோமசுந்தரனார் பொ.வே., (உ.ஆ), 1955, குறுந்தொகை, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

[8.] தமிழண்ணல், 2010, தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி - 1, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

[9.] துரைச்சாமி பிள்ளை ஔவை சு, (உ.ஆ), 2009, ஐங்குறுநூறு - 2, இனியமுது பதிப்பகம், சென்னை.

[10.] நாராயணசாமி பின்னத்தூர் அ, 1915, எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நற்றிணை, சென்னப்பட்டணம்: சைவ்வித்தியா நுபாலனயந்திரசாலை.

[11.] பிள்ளை டாக்டர் கே.கே, 2001, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், சென்னை: உலகத்தமிழாராய்சி நிறுவனம்.

[12.] வெள்ளைவாரணன் பேராசிரியர் க., 1983, தொல்காப்பியம் களவியல் உரைவளம், மதுரை: பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

[13.] வேங்கடசாமி ந.மு., 1957, எட்டுத்தொகையுள் ஒன்றான அகநானூறு நித்திலக்கோவை, சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[14.] வேங்கடராமன் வித்துவான் ஹெச்., (ப.ஆ), 2019, நற்றிணை மூலமும் உரையும், சென்னை: டாக்டர் உ.வே.சா நூல் நிலையம்.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026